# 13 சமூகச் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வோம்



வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு சவால்களை (அறைகூவல்களை) நாம் எதிர்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இவ்வாறான சவால்கள் உடல், உளம், சமூகம் என்ற அடிப்படையில் உருவாகும். எவ்வாறாயினும், இது உடல் நலத்திற்கு இடையூறாக அமையும். ஒழுங்கான முறையில் உடல் நலத்தைப் பேணுவது மிக முக்கியமானதாகும். நாம் சவால்களை வெற்றிகொள்வதற்கு சில முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். அதனை நாம் எப்படிச் செய்யலாம்? முதலில் சவாலின் தன்மைகளையும் ஆரம்பத்தையும் அறிய வேண்டும். பிரச்சினைகளை ஆரம்பத்தில் நீக்கிக்கொள்ளாது விட்டால், அது மேலும் பிரச்சினைக்குரியதாக அமையும். சமூகம் என்பது நாம் வாழும் குடும்பம், சுற்றத்தார், பாடசாலை மற்றும் நாம் சந்திக்கும் நபர்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

## சவால்கள்

இச்சமூக வட்டத்தினுள் ஒழுக்க மேம்பாடு, கலாசாரம், விழுமியம் என்பன உள்ளடங்கும். இவை சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களாகும். இச் சமூக விழுமியங்கள் ஒவ்வொரு நபர்களினதும் வேறுபட்ட நோக்கங்களில் சவால்களாக உருவாகின்றன. முன் கட்டிளமைப் பருவத்தைக் கடந்து கொண்டிருக்கும் எங்களுக்கு எப்போதும் தீர்மானங்களை எடுக்கமுடியாத சந்தர்ப்பங்களில் பெரியோர்களின் புத்திமதியும் வழிகாட்டலும் அவசியமாகின்றது. ஆகையால், சவால்களிலிருந்து நாம் விடுபடுவதற்கு முன் கவனிக்க வேண்டியவை.

- ஒத்த வயதுக் குழுக்கள், நண்பர்கள் ஆகியோரின் பாதிப்புகள்
- உடல் மாற்றம் சம்பந்தமாகக் கவலை கொள்ளாதிருத்தல்
- இயற்கையான விருப்பு, வெறுப்புகளுக்கு அடிமையாகதிருத்தல்
- பெற்றோர்களின் அன்பு, ஆதரவில் நம்பிக்கைகொள்ளல்
- தவறான வழியில் செல்லும் நண்பர்கள் உங்களைப் பின்பற்றுமாறு நடத்தல்.
- சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடும் நண்பர்களை மீட்டுப்பார்த்தல். (உதாரணம் : மது அருந்துதல், புகைத்தல், பாலியல் துஷ்பிரயோகம், கூடாத நட்புகள்)

அவர்களை உங்களது நெருங்கிய நண்பர்களாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

புத்திசாதுரியமான கருத்துகளைப் பரிமாறல், நாட்டு நிலைமைகள் மற்றும் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடல் நாட்டின் அபிவிருத்தி சம்பந்தமான கருத்துகளை முன்வைத்தல் போன்றவற்றின் மூலம் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு அடிமையாகாத நிலை ஏற்படுகின்றது. நீங்கள் நாட்டின் எதிர்கால வாரிசுகள்.

கலந்துரையாடலுக்குத் தேவையான மகத்தான சிந்தனைகளின் செயற்பாடுகளுக்கு முன்வாருங்கள். இந்தப் பருவம் மனதைக் கட்டுக்கோப்புக்குள் வைத்துக்கொள்ள இயலாத காலம். நீங்கள் குதூகலமாக இருபாலாரும் ஒன்றுபட்டு செயல்படும் வேலைத்திட்டங்களாக ஆடல், பாடல், விளையாட்டு, நாடகம், கல்விச் சுற்றுலாக்கள், நடனம் என்பன இவ்வயதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு பரிகாரமாக அமையும்.

## உணவு

உணவும் உங்களுக்கான ஒரு சவாலாகும். எமது சமூகத்திற்கு பொருத்தமற்ற வாழ்க்கை முறை பற்றியும் அவதானம் தேவை. இன்று சமூகத்தில் மிகப் பெரிய சவாலாக புதுவகையான உணவுகளும் அவற்றின் விற்பனையும் அமைந்துள்ளது. இன்று அநேகமானோர், வேலையைச் சுலபமாக்குவதற்கு உடனடி உணவுப் பழக்கத்திற்கு ஆளாகியுள்ளனர். உடனடி உணவைப் பெற்றுக்

கொள்வது மிகவும் இலகுவாகையால், அவற்றுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டு தமது உடல் நலத்திற்கு ஏற்படும் கெடுதிகளை அறியாதுள்ளனர். எண்ணெய் வகைகளால் அதிகம் (பதப்படுத்திய) சுவையாக்கப்பட்ட உணவு வகைகளை உண்பதால் பலவித நோய்கள் ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றனர்.

இன்று தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் சந்தையில் தாராளமாக விற்பனைக்காகக் காணப்படுகின்றன. பல ஊடகங்களினூடாக இன்று அவை விளம்பரப்படுத்தப்படுகின்றன. இதனால், விளம்பரங்களினூடாக நல்ல பொருள்களைப் போல பாதிப்பை ஏற்படுத்தும் பொருள்களும் விளம்பரப்படுத்தபட்டுப் பிரபல்யமாகின்றன. பலவகையான உணவுப் பானங்கள், மதுவகைகள், சிகரட் போன்ற புகைத்தல் பொருள்கள் என்பன இதில் உள்ளடங்கும். எனவே, ஊடகங்களின் கருத்துகளை அறிதல், அவை மக்களுக்குத் தரும் படிப்பினைகள் போன்றவற்றை விளங்கிக்கொள்ளல் போன்றன உங்களது பொறுப்பாகும்.

### வேறு சவால்கள்

இளமைப்பருவத்தில் உடல், உள வளர்ச்சிக்கு உட்படுவதும் உங்களுக்குச் சவாலாகும். உடலின் வேகமான வளர்ச்சி, முதலாவது மாதவிடாய், முதல் சுக்கிலம் வெளியேறல் ஆகியன உங்களைப் பயமுறச் செய்யும் சிறு சம்பவங்களாகும். சமவயதுடையவர்களுடன் பழகும் விருப்பும் இன்னோர் சவாலாகும். சில சம்பவங்கள் பயத்தை ஏற்படுத்துவனவாகும். சில சந்தர்ப்பங்களில் நீங்கள் எதிர்பாராத சம்பவங்கள் ஏற்படக்கூடும். அப்படியான மன உளைச்சல்களை வெற்றிபெறுதலும் ஒரு சவாலாகும். சில சம்பவங்கள் பயமுறுவதைக் குறைத்து விடும். நண்பர்களின் கூட்டு இன்னோர் சவாலாகும். சமவயதுக் குழுக்களுடன் இயங்கும் விருப்பும் ஒரு சவாலாகும். சிலவேளைகளில் வழிகெட்டுச் செல்லும் எண்ணங்களும் ஏற்படலாம். இத்தகைய நிலைமைகளில் சரியான முறையில் அவற்றைக் கட்டுப்படுத்தி வெற்றிகொள்வதும் மிகப் பெரிய சவாலாகும். மூடநம்பிக்கைகளும் ஒரு சவாலாகும். இளமைப் பருவத்தையடையும் நீங்கள் அத்தகைய மூடநம்பிக்கைகளுக்கு ஏமாறாமல் உண்மையை நன்கு விளங்கி சந்தோஷமாக, எதிர்காலத்தை நல்ல நிலையில் அமைத்துக்கொள்ள முயற்சியுங்கள்.

### ஊடகங்கள்

ஊடகங்கள் மூலம் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களும் பல உள்ளன. தேவையற்ற, தரமற்ற தகவல்கள், ஆபாசக்காட்சிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் தற்போது அதிகமாக உள்ளன. அதனால், உங்கள் மனதை உங்கள் வயதுக்கு ஏற்ற விடயங்களில் மட்டும் செலுத்த வேண்டும். உங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள வாய்ப்புகளை, அதிகூடுதலாக உங்கள் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். கட்டிளமைப் பருவம் தர்க்க சிந்தனையுடன் கூடிய ஆக்கத்திறன் நிரம்பிய பருவமாகும். எனவே, அவ்வாறான எண்ணங்களுக்கு இடம் வழங்குங்கள்.

**துர்நடத்தை**

துர்நடத்தைகள் உங்களது உடல், உள, சமூக நலனில் பாதிப்பை ஏற்படுத்தும். மிகவும் பாதிக்கப்பட்ட மனநிலையுடைய ஒருவர், உங்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்ல முயலக்கூடும். கவனமாக இருங்கள். புத்திசாதுரியமாக உங்கள் பெற்றோர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் மீது நம்பிக்கை வையுங்கள். அவர்கள்தான் உங்களது நல்ல நண்பர்கள்.

**சூழல் மாசடைதல்**

மாசடைந்த சுற்றாடல் அதிகமான சுகாதாரப் பிரச்சினைகளை உருவாக்கும். மாசற்ற சுற்றாடலை உருவாக்குவதற்காக அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கும் வேலைத் திட்டங்களுக்கும் உதவுவதற்காக ஒன்று சேருங்கள். இது உங்கள் கடமையாகும். இது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் சவால்களுக்கு ஒரு தீர்வாகும்.

**ஒலி மாசடைதல்**

ஒலிகளும் மாசடைந்த சூழலை உருவாக்கும். இத்தகைய ஒலி மாசடைதலினால் ஏற்படும் தாக்கமும் உணர்ச்சியுள்ள அங்கங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் காரணியாகும்.

**போட்டிகள்**

போட்டிகளும் உங்களுக்கு உளவியல்ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் காரணியாகும். உங்களது கல்வி பரவலாக ஒரு போட்டியாகும். பெறுபேறுகள் தோல்வி பெறுவதனால் பலரின் வாழ்க்கையை வீணாகிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. இதனால், சிலர் மனநோயாளிகளாகவும் மாறுகின்றனர். எங்களுடைய செயற்பாடுகள் சமமாகப் பேணப்படுவதன்மூலம் இதனைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். கல்விச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, ஒரு நாளைக்கு ஓய்வு நேரத்தில் ஒரு மணித்தியாலத்தை விளையாட்டு, கலை நிகழ்வு என்பன போன்ற அதிக பயனை அளிக்கும் செயற்பாடுகளில் செலவிடலாம்.

**பிரத்தியேகக் கல்வி**

பிரத்தியேகக் கல்வி சகல மாணவர்களுக்கும் பொருத்தமற்ற விளைவுகளை ஏற்படுத்தும் பிரதான சவாலாகும். பெற்றோர்களும் இந்த நிலைமைகளுக்குப் பொறுப்பானவர்கள். தற்போதைய கல்வியமைப்பு போட்டி முறையில் இருப்பதால் பிள்ளைகள் தமது திறமையை அதிகரித்துக் கொள்வதற்காக தரம் 2 இலிருந்தே பிரத்தியேக வகுப்புகளை நாடிச் செல்கின்றனர். பிள்ளைகளின் மகிழ்ச்சியான இளமைப்பருவம் இதனால் மூழ்கடிக்கப்படுகின்றது. எனவே, உடல், உளரீதியாகப் பாதிப்புக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கட்டிளமைப் பருவத்தில் உள்ள உங்களுக்கு இது தொடர்பாகச் செய்யக்கூடிய ஒன்றும் இல்லாவிடினும் உங்களுக்கும் ஒரு பொறுப்பு உண்டு. பெற்றோர் மற்றும் வயதில் மூத்தவர்களுக்கு உதவிகளைச் செய்வதற்கு முன்வருதல் வேண்டும். சூழல் சுத்தம் தொடர்பான சேவை, பாடசாலைப் பிள்ளைகளுக்கான மகிழ்ச்சிதரக்கூடிய செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் என்பன பிள்ளைகளை ஒழுங்கீனமான செயற்பாடுகளில் இருந்து மீட்சி பெற வழியமைத்துக் கொடுப்பதாக அமையும்.

உங்களுக்கு மிக நெருக்கடியான நிலைமைகளை உருவாக்கும் நோய்கள் பற்றி 8 ஆம் தரத்தில் கற்றவற்றை ஞாபகப்படுத்திப் பாருங்கள்.

**செயற்பாடு 13.1**

நீங்கள் தெரிந்து வைத்துள்ள நோய்களைக் குறிப்பிடுங்கள். தொற்றும் நோய், தொற்றா நோய்கள் என வரிசைப்படுத்துங்கள்.

கீழ் குறிப்பிடப்படும் நோய்களும் உங்களுக்கான சவாலாகும். இந்த நோய்களையும் உங்கள் பட்டியலில் இணைத்துக் கொள்ளுங்கள்.

| தொற்றக்கூடிய நோய் | தொற்றாத நோய் |
|---|---|
| 1. டெங்கு<br>2. சிக்குன்குனியா | நீரிழிவு நோய்<br>உயர்குருதி அமுக்கம் |

## நோய்கள்

நோய்கள், நமது வாழ்க்கையில் முகங்கொடுக்க வேண்டிய மற்றுமோர் சவாலாகும். தொற்றுநோய், தொற்றாநோய் என எங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களைப் பெறல் மிகவும் அவசியம். 8 ஆம் தரத்தில் நோய்கள் பற்றிய அறிவைப் பெற்றிருப்பீர்கள் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

**எமக்குச் சவாலாக உள்ள நோய்கள் எவை?**

- எயிட்ஸ்
- டெங்கு
- எலிக்காய்ச்சல் (லெப்டொபய்ரோசிஸ்)
- வயிற்றோட்டம்
- கொலரா

எயிட்ஸ் மிகவும் பயங்கரமான நோய் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நோய் சம்பந்தமான காரணிகளைத் தெரிந்து கொண்டால், இந்நோய் ஏற்படாது தவிர்ப்பது மிகமிக எளிது. இன்று நம்நாட்டின் கலாசார சீரழிவுகளுக்கு இந்த நோய் பரவுவது ஒரு காரணம் எனக் கூற முடியும்.

எயிட்ஸ் நோய் வைரஸ் மூலம் பரவுகின்றது. இது HIV (Human Immuno Deficiency Virus) என அழைக்கப்படுகின்றது. எச். ஐ. வைரஸ் காற்று, நீர், உணவு என்பவற்றினூடாகத் தொற்றுவதில்லை. நோய் தொற்றுள்ளவர்களின் குருதி, யோனி, சுக்கிலம் ஆகியவற்றில் அதிகமான வைரஸ் காணப்படுகின்றது. எனினும், உமிழ்நீர், கண்ணீர், வியர்வை மற்றும் தாய்ப்பால் ஆகியவற்றில் இந்த வைரஸ் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

**இந்நோய் பரவுவது எப்படி?**

முக்கியமாகத் தவறான பாலியல் தொடர்புகளால் எயிட்ஸ் நோய் பரவுகின்றது. இதற்கும் மேலதிகமாக, பின்வரும் வழிகளிலும் எயிட்ஸ் பரவுகின்றது.

1. HIV உள்ள ஒருவரின் குருதி மற்றுமொருவருக்கு உட்செலுத்தப்படுவதன் மூலம்
2. உரிய முறையில் தொற்று நீக்கப்படாத ஊசி, சிரின்ஜ், மற்றும் சத்திர சிச்சைக்கான உபகரணங்கள் என்பனமூலம்
3. HIV தொற்றுள்ள கர்ப்பமான தாயிலிருந்து வயிற்றிலுள்ள சிசுவுக்கு

HIV எயிட்ஸ் வைரஸ் ஒருவரின் உடலினுள் உட்சென்ற பின்னர், குருதியில் காணப்படும் வெண்குருதிச் சிறு துணிக்கைகளைத் தாக்கி அந்த கலத்தின் தொழிற்பாடுகளை அழித்து விடுகின்றது. நமது குருதியில் காணப்படும் வெண்குருதிச்சிறுதுணிக்கைகளின் தொழிற்பாடு நமது உடலில் உட்புகும் நோய்க் கிருமிகளை அழித்தொழிப்பது ஆகும். இது நமது உடலின் இயற்கை நிர்ப்பீடனமாகும். இச் செயற்பாட்டில் தடை ஏற்படும்போது, நமது உடலின் இயற்கையான நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாது போகும். இதனால், எல்லா வித நோய்களும் இலகுவாக எம்மைப் பாதிப்பிற்குள்ளாக்கும்.

**பின்வரும் வழிகளினால் HIV தொற்று ஏற்படாது**

- தொற்று ஏற்பட்டவருடன் ஒன்றாக இருந்து படித்தல் / வேலை செய்தல்.
- தொற்று ஏற்பட்டவருடன் ஒரே வீட்டில் வாழ்வதன் மூலம்
- ஒன்றாக விளையாடுவதால்
- உடைகள் உணவுப் பாத்திரங்களைப் பயன்படுத்துவதால்
- மலசல கூடம் மூலமாக
- நுளம்பு அல்லது நுண்ணங்கிகள் மூலம்

எயிட்ஸ் நோயாளர்களை ஒதுக்கி வைத்தல் கூடாது. அவ்வாறு ஒதுக்கி வைக்கும்போது HIV தொற்றுள்ளவர்கள் தமக்கு நோய் உள்ளதை வெளிக்காட்டாது மறைப்பர். இதனால், அவர்கள் மூலம் மற்றவர்களுக்கு நோய் பரவும் வாய்ப்புகள் அதிகரிக்கும். எனவே, அவர்களுக்கு ஆதரவளித்து அவர்கள் வாழும் சூழலில் அவர்களுக்கான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

### *எலிக் காய்ச்சல்*

எலிக் காய்ச்சல் நோய் "**லெப்டொபய்ரோஸிஸ்**" (Leptospirosis) என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இந்நோய் பற்றீரியா மூலம் பரவுகின்றது. வயல், சாக்கடை, சேற்று நீர், மாட்டுப்பண்ணை போன்ற எலிகள் வாழும் இடங்களில் இப்பற்றீரியாக்கள் நிறைந்து காணப்படுகின்றன. எலியின் சிறுநீருடன் சேரும் பற்றீரியா வாழும் சூழலுக்குப் பரவுகிறது.

இப்படியான இடங்களில் வெற்றுக் கால்களுடன் நடமாடுவோரின் பாதங்களில் காணப்படும் சிறு காயங்களுக்கூடாக கீறல்களினுடாக இந்த பற்றீரியாக்கள் உட்புகுந்துவிடும். ஆகவே, இப்படியான இடங்களில் நடமாடும்போது, கால்களில் காயங்கள் உள்ளவர்கள் அவற்றைத் துணிகளால் மூடிக் கட்ட வேண்டும். கடுமையான காய்ச்சல், நடுக்கம், சோர்வு, தலைவலி, வாந்தி, சதைப்பிடிப்பு, மூட்டுகளில் வலி, வீக்கம், கண்கள் சிவப்பாதல் போன்றவை இந்நோய்க்கான அறிகுறிகளாகும். இந்த பற்றீரியா நோயுள்ள நாய், பூனை போன்ற செல்லப் பிராணிகள் மூலமும், ஒருவரின் உடம்பினுள் உட்செல்வதற்கு இடமுண்டு.

### வயிற்றோட்டம்

வயிற்றோட்டம் நம் நாட்டில் அடிக்கடி ஏற்படும் தொற்று நோய். சனநெருக்கடியுள்ள இடங்களில் சுகாதார வசதிக்குறைபாடு, சுகாதாரப் பழக்க வழக்கங்கள் இன்மை என்பன இந்நோய் ஏற்படக் காரணங்களாகும்.

அகதி முகாம்களில் போதியளவு சுகாதார வசதிகள் காணப்படாத பட்சத்தில் வயிற்றோட்டம், அம்மை போன்ற நோய்கள் பரவுவதற்கு வாய்ப்புகள் உண்டு. தேசிய நோய்த்தடுப்புச் செயற்றிட்டம் மூலம் பரவுகின்ற இவ்வாறான பல நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**ஒப்படை 13.1**

- தடுப்பூசி மருந்துகள் மூலம் குணப்படுத்தக்கூடிய நோய்கள் யாவை?
- சிறுவயதில் இத்தடுப்பூசி உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா?
- உங்கள் பெற்றோர்களிடம் இதைப் பற்றி அறிந்து விடை அளியுங்கள்.

## டெங்கு நோய்

டெங்குநோய் எமது சுகாதாரத்துக்குச் சவாலான மற்றுமொரு நோயாகும். நோயாளியின் குருதியை உறிஞ்சிக் குடித்த நுளம்பு, வேறொருவரின் குருதியை உறிஞ்சும்போது டெங்கு நோய்க் காரணி அவரது உடலினுள் செல்லும். டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் (நோய்க்காவி) பின்வருமாறு

- ஈடிஸ் ஈஜிப்டர்ஸ் *(Aedes aegypti)*
- ஈடிஸ் எல்போசிக்டஸ் *(Aedes albopictus)*

**நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழித்தொழிப்பது எவ்வாறு?**

- வீசி எறியப்பட்ட சிரட்டைகள். இளநீர் கோம்பைகள், வெற்றுத்தகரங்கள், யோகட் கப், ஐஸ்கிறீம் வெற்றுக் கோப்பைகள் என்பவற்றைத் தூளாக்கிப் நொருக்கி புதைத்தல்
- தண்ணீர் நிறையும் குழிகளை மணலிட்டு மூடிவிடல்
- கூரைப்பீலி, பழைய ரயர் போன்றவற்றில் மழைநீர் தேங்கி நிற்காது பார்த்துக்கொள்ளல்

இதற்கு மேலதிகமாக வேறு காரணங்களையும் கண்டறியுங்கள். இதற்கு முன் நீங்கள் இது விடயமாகக் கற்றதை நினைவில் நிலைநிறுத்திப் பாருங்கள்.

இச்சவால்களில் வெற்றியடைய உங்களுடைய சுற்றத்தார்களை அறிவுறுத்தி, நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிப்பதற்கு உற்சாகமூட்டுங்கள்.

## காலநிலை மாற்றங்களால் ஏற்படும் அனர்த்தங்கள்

தரம் 8 இல் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாகக் கற்றதை நினைவிற்கு கொண்டு வாருங்கள். வெள்ளப்பெருக்கு, சூறாவளி, வறட்சி, மண்சரிவு, பூமியதிர்ச்சி, சுனாமி, வளிமண்டலத்தில் தேவையற்ற வாயுக்கள் அதிகரித்தல், காட்டுத்தீ, எல் - நினோ விளைவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் காலநிலை மாற்றங்களை ஏற்படுத்தும். வளிமண்டலத்தில் $CO_2$ அதிகரிக்கும்போது சூழல் வெப்பம் அடையும். அதிக காடுகள் அழிக்கப்படுவதும் இவ்விளைவை அதிகரிக்கும். இதனால், கீழ் குறிப்பிடப்படும் காலநிலை மாற்றங்கள் உருவாகும்.

- மிகவும் கூடுதலான குளிர் பிரதேசங்கள் உருவாகும்.
- மிகவும் வெப்பமான பிரதேசங்கள் உருவாகும்.
- காற்று வீசும் தன்மை மாறுபாடடையும்.
- மழைவீழ்ச்சிக் கோலங்களில் மாற்றங்கள் ஏற்படும்.
- மிகக்கூடுதலான மழையும் கடுமையான வறட்சியும் ஏற்படும் (எல் - நினோ விளைவு).
    - வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, பலத்த காற்று, வறட்சி, காட்டுத்தீ, வழமைக்கு மாறான இடி, மின்னல் போன்றவை ஏற்படும்.
    - இதற்கு மேலதிகமாக சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களும் ஏற்படலாம்.

**இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள்**

1. உயிர் இழப்பு, பொருள் சேதம்
2. விவசாயச் செய்கை பாதிப்படைதல்
3. விவசாய, மீன்பிடி உற்பத்திகள் குறைவடைதல்
4. தொற்று நோய்கள் அதிகரித்தல்
5. புது வித நோய்கள் உருவாகுதல்
6. புதிய கிருமி கொல்லிகளால் வலிமையான மற்றும் புதிய நோய்க்கிருமிகள் உற்பத்தியாதலும் பரவுதலும்
7. இயற்கை, தொல்பொருள் சின்னங்கள் அழிதல்
8. உயிர்ப்பல்வகைமை பாதிக்கப்படல், உயிரினங்கள் அழிவடைதல்

## கலாசாரத் தடைகள்

தொழினுட்பவியல் விருத்தியால் நாடுகளுக்கிடையில் இடைத்தொடர்புகள் அதிகரிப்பதும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு மக்கள் குடியேறுவதும் கலப்பு கலாசாரம் ஏற்பட வழிவகுக்கும். ஒரு நாட்டின் தனித்துவம், கலாசார விழுமியங்கள் இதனால் பாதிப்படையும்.

## புதிய தொழினுட்பத்தினால் உருவாகும் நிலைமைகள்

**தொழினுட்ப முன்னேற்றத்தின் சவால்கள்**

- அணுசக்திப் பயன்பாடு
- புதிய இயந்திர உபயோகம்
- புதிய ஆயுத உற்பத்தி
- புதிய தொழினுட்ப விவசாய இயந்திர உபயோகமும் ஒழுங்கமைப்பான பயன்பாடும்
- மாற்றுச் சக்தி வளங்களின் உபயோகமும் முறைமைகளும்
- புதிய மருந்து வகைகள்
- அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகளின் உற்பத்தி

இத்தொழினுட்ப முன்னேற்றங்களினால் சூழலுக்கு விடப்படும் செயற்கைக் கழிவுகளால் பாதிப்பு எற்படும்.

1. அணுக் கழிவுகளால் அதிக சேதம் ஏற்படும்.
2. பல இரசாயனக் கழிவுப் பொருள்களால் ஏற்படும் பாதிப்புகள் /நோய்கள்.
3. $CO_2$ (காபனீரொட்சைட்டு) வளிமண்டலத்தில் அதிகரித்தல்.
4. பல்வேறு பூச்சிகொல்லிகளும் விவசாய இரசாயனங்களும்.

**இவற்றினால் ஏற்படும் சேதங்கள்**

**1. அணுக் கழிவுகளினால் ஏற்படும் சேதம்**

- உயிர்களுக்கும் சுகாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படல்
- இயற்கைச் சுற்றாடலில் கதிர்வீச்சுப் பொருள்கள் அதிகரித்தல்
- புற்றுநோய்க்கான சந்தர்ப்பம் அதிகரித்துச் செல்லல்

2. **இரசாயனக் கழிவுப் பொருள்களால் ஏற்படும் பாதிப்புகளும் நோய்நிலைமைகளும**
3. **விவசாய நிலங்களை விரிவுபடுத்துவதனால் அதிகரித்த விவசாய இரசாயனப் பொருள்களின் பயன்பாடு**
   - உயிரினங்களின் இயற்கையான வாழிடங்கள் அழிந்து போதல்
   - விவசாயத்திற்கு உதவி புரியும் விலங்குகள், பூச்சிகள், பறவைகள் அழிதல்
   - நீர் மாசடைதல்

4. **வளிமண்டலத்தில் $CO_2$ (காபனீரொட்சைட்டு) அதிகரித்தல்**
   - பூமியின் வெப்பம் அதிகரித்தல்
   - வளிமண்டலத்தில் $O_2$ குறைவடைதல்
5. **வளிமண்டலத்தில் நைதரசன் ஒட்சைட்டு வாயுக்கள் அதிகரித்தல்**
   - ஓசோன் படைக்குப் பாதிப்பு ஏற்படல்
   - ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படல்

## முரண்பாடுகள்

இயற்கை வளங்களும் நிலமும் வரையறைக்குட்பட்டவையாகும். அதிகரித்து வரும் சனத்தொகைக்கேற்ப நிலம் மற்றும் வளங்கள் என்பவற்றை அதிகரிக்க முடியாததால் முரண்பாடுகள் தோன்றுகின்றன.

- வளங்களைப் பங்கிடுவதில் முரண்பாடுகள் ஏற்படல்
- கலாசாரக் கலப்பால் ஏற்படும் முரண்பாடுகள்
- சக்திகளைப் பிரயோகிப்பதால் ஏற்படும் முரண்பாடுகள்
- நாட்டினை ஆக்கிரமித்தல் அதிகரித்தல்
- பயங்கரவாத நடவடிக்கைகள், திருட்டுகள் அதிகரித்தல்
- உணவு சம்பந்தமான முரண்பாடுகள்
- நீர்ப் பற்றாக்குறை
- காணிப் பங்கீட்டில் முரண்பாடு ஏற்படல்

## அனர்த்தங்களுக்கு முகங்கொடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படக்கூடிய விடயங்கள்


- சூழலை மாசடையச் செய்யும் இரசாயனப் பொருள்கள் நச்சு வாயுக்கள் மற்றும் $CO_2$ என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முறைகளை விருத்தி செய்தல் மற்றும், சகலருக்கும் இது தொடர்பான அறிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தல்.
- வெள்ளப் பெருக்கு மற்றும் சுனாமி என்பவற்றால் ஏற்படும் அழிவுகளை மட்டுப்படுத்த முன்கூட்டியே எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
  - கண்டற் தாவரங்களை அழிக்காதிருத்தல்.
  - கடலோரத்தில் தாவரங்களை வளர்த்தல்.

- கடலோரங்களில் வீடுகளை அமைக்காது தூரத்தில் அமைத்தல்.
- ஆற்றோரங்களில் மணல் அகழ்வதைத் தவிர்த்தல்.
- பொலித்தீன் போன்றவற்றால் வடிகால்கள் தடைப்படாது கழிவுநீர் வழிந்தோட வழியமைத்தல்.
- நாடு முழுவதும், நகரங்களை உருவாக்கும் திட்டத்தைக் குறைப்பதுடன், முடியுமான வரை மரங்களை நடுதல்.
- இயற்கைச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தல்.
- காட்டு அங்கிகள் அழிவடைவதைத் தடுத்தலும் வரையறுத்த வாழ்க்கைக்கு தயாராகச் செயற்படுதலும்.
- நம் நாட்டின் கலாசாரம், பண்பாடு, விழுமியம் தொடர்பாக பிள்ளைகளுக்கும் மக்களுக்கும் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவி செய்வதன் மூலம் நமது நாட்டை அடையாளப்படுத்தல், நமது நாட்டின் கௌரவத்தைக் காத்தல். நாட்டின்மீது அன்பு செலுத்தல், ஏனைய நாடுகளை அவமரியாதை செய்யாது இருத்தல்.
- பல்வேறுப்பட்ட இன, மத, மொழி மக்களுடன் சேர்ந்து வாழ்வதற்கான அறிவு, திறன், மனப்பாங்குகளை வளர்த்தல்.

**செயற்பாடு 13.2**

இப் பாடத்தின் உள்ளடக்கத்தை மீண்டும் படியுங்கள். குழுக்களாகப் பிரிந்து உங்கள் குழுவிற்கு ஒரு சவாலைத் தேர்ந்தெடுங்கள். தர்க்க சிந்தனையுடனும் ஆக்கத்திறனுடனும் சிந்தித்து நீங்கள் தெரிவு செய்த சவாலுக்கான தீர்வுகளை முன்வையுங்கள்.

சவால்களை உடல், உள, சமூக ரீதியாக வெவ்வேறாக வேறுபடுத்த முடியாது. ஏனெனில், நாம் எதிர்நோக்கும் சகல சவால்களும் எங்களை உடல், உள, சமூக ரீதியாகப் பாதிப்பதேயாகும். கீழ்க்காட்டிய அட்டவணையிலிருந்து இதனை விளங்கிக்கொள்ளலாம்.




| சமூகம் | உடல் | உளம் |
|---|---|---|
| துஷ்பிரயோகம்<br>அநீதி<br>தனிமைப்படுத்தல்<br>போசணை | துஷ்பிரயோகம்<br>அற்ககோல்<br>சூழல் மாசடைதல்<br>போசணை<br>நோய்கள் | அநீதி<br>கட்டிளம் பருவம்<br>நோய்கள்<br>போசணை |